சில வரிச் செய்திகள்!

கிருஷ்ணகிரி பட்டாசு விபத்து:

பலி எண்ணிக்கை 9 ஆக உயர்வு!

கிருஷ்ணகிரி, ஜூலை 31 -

கிருஷ்ணகிரி பட்டாசு விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம் பழைய பேட்டையில் தனியாருக்கு சொந்தமான பட்டாசு குடோனில் நேற்று பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. பயங்கர சத்தத்துடன் குடோனில் இருந்த பட்டாசுகள் வெடித்து சிதறின. பட்டாசு குடோன் குடியிருப்பு நிறைந்த பகுதியில் அமைந்திருந்ததால் அருகில் உள்ள வீடுகளும் இடிந்து தரைமட்டமாகின. விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விபத்தில் ஏற்கனவே 8 பேர் உயிரிழந்த நிலையில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த 9 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சியாட்டில் நகர சமூக விழாவில் துப்பாக்கிச்சூடு: 5 பேர் பலி!

வாஷிங்டன், ஜூலை 31 -

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ளது சியாட்டில் நகரம். அங்குள்ள ரெய்னர் பீச் பகுதியில் உள்ள 'சேப்வே' கடையில் சியாட்டில் சமூக பாதுகாப்பு தொடர்பான ஒரு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இலவச உணவு, இசை என இந்நிகழ்ச்சியில் மக்களை ஒன்றிணைக்கும் பல அம்சங்கள் இருப்பதால், மக்கள் பெருமளவில் உற்சாகமாக பங்கேற்பது வழக்கம். நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, துப்பாக்கி ஏந்திய ஒருவன் திடீரென அங்கு கூடியிருந்த மக்களை நோக்கி சரமாரியாக சுட்டான். இதில் 5 பேர் கொல்லப்பட்டனர். பலியானவர்களில் 4 ஆண்களும் 1 பெண்ணும் அடங்குவர். 2 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு ஹார்பர்வியூ மருத்துவ மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

ஆகஸ்ட் 5 முதல் மேட்டுப்பாளையம் - உதகை இடையே சிறப்பு ரெயில்!

நீலகிரி, ஜூலை 31 -

மேட்டுப்பாளையம் உதகை இடையே மலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த மலை ரெயிலில் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் பயணம் செய்து மலைப்பகுதியில் உள்ள இயற்கை எழில் காட்சிகளை கண்டு ரசித்து வருகின்றனர். இந்த நிலையில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மேட்டுப்பாளையம் உதகை இடையே ஆகஸ்ட் 5 முதல் 27 ஆம் தேதி வரை வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

கேரளாவில் திடீரென தீ பிடித்து எரிந்த அரசு பேருந்து! பயணிகள் காயமின்றி தப்பினர்!

திருவனந்தபுரம், ஜூலை 31 -

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அட்டிங்கல்திருவனந்தபுரம் வழித்தடத்தில் இயக்கப்படும் அரசு பேருந்து செம்பகமங்கலம் அருகே வந்தபோது இன்ஜின் பகுதியில் புகை வெளிவந்தது. இதை கவனித்த ஓட்டுநர் உடனே பேருந்தை நிறுத்தி பயணிகளை வெளியேற்றினார்.

சில நிமிடங்களில் பேருந்தில் திடீரென தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இந்நிலையில் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பேருந்து ஓட்டுநரின் சாமர்த்தியத்தால் பயணிகள் எந்தவித காயமுமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவை எதிர்கொள்ள தைவானுக்கு அமெரிக்கா ரூ.3 ஆயிரம் கோடி மதிப்பில் ராணுவ உதவி!

வாஷிங்டன், ஜூலை 31 -

கிழக்காசிய ஜனநாயக நாடான தைவானை, சீனா தனது தேசத்தின் ஒரு பகுதியாக அறிவித்தது. ஆனால், தைவான் இதனை ஏற்க மறுத்து வருகிறது. தேவைப்பட்டால் ராணுவ ஆக்ரமிப்பு மூலம் தைவானை கைப்பற்ற போவதாகவும் சீனா கூறி வருகிறது.

கடந்த ஆண்டு, சீன இராணுவம் தைவானை சுற்றியுள்ள பகுதிகளில் 2 பெரிய ராணுவ பயிற்சிகளை நடத்தியது. இந்த பயிற்சிகளில் தைவான் தீவின் முற்றுகையும் நடைபெற்றது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கிடையே பதட்டம் நிலவி வருகிறது.

இந்நிலையில் சீனாவிலிருந்து வரக்கூடிய தாக்குதல்களை எதிர்கொள்ளவும், தற்காப்பு திறனை மேம்படுத்தி கொள்ளவும், தைவானுக்கு அமெரிக்கா சுமார் ரூ.2800 கோடி ($345 மில்லியன்) மதிப்பிலான ராணுவ உதவியை வழங்க போகிறது.

அழகைப் போற்றுவோம்

புலிகளின் இடத்தை பேணிக் காப்போம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 30-

உலக புலிகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புலிகளின் இடத்தை பேணிக்காத்து அவற்றின் அழகைப் போற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகப்புலிகள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு :-

உலகப்புலிகள் நாளில், சிறப்பு மிகு உயிரினமான நம் புலிகளின் பாதுகாப்புக்காகக் குரல் கொடுப்போம்! அருகி வரும் உயிரினமான புலிகளைக் காப்பதற்கான தமிழ்நாடு அரசின் உறுதியான முயற்சிகள் மிகச்சிறந்த முடிவுகளை அளித்துள்ளது. 2018ஆம் ஆண்டில் 264 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2022இல் 306 ஆக உயர்ந்துள்ளது. நாம் அனைவரும் இணைந்து கானகத்தில் புலிகளின் இடத்தைப் பேணிக்காத்து, அவற்றின் அழகைப் போற்றுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லை மாவட்டம் பாளையஞ்செட்டி குளம் - ரெட்டியார்பட்டியில்

கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்!

அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு! இரா. ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

நெல்லை, ஜூலை 30 -

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பாளையஞ்செட்டிகுளம் மற்றும் ரெட்டியார்பட்டி ஆகிய இடங்களில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம் நடைபெற்று வருவதை நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவுத் துறையின் மூலம் 643 பயனாளிகளுக்கு ரூ5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெற்ற கடன் உதவிகள் வழங்கும் நிகழ்வில் 643 பயனாளிகளுக்கு ரூபாய் 5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகளையும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 32 பயனாளிகளுக்கு ரூபாய் 11.56 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் 10 மாற்றுத்திறனாளி களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களையும் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர்கள் தங்கள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்ற நோக்கில் மகளிர் சுய உதவி குழுவினை ஏற்படுத்தி பல்வேறு கடன் உதவிகளை வழங்கி தொடங்கி வைத்தார்கள்.தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவி குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களும் பெண்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்று உயரிய நோக்கில் நகைக்கடன் தள்ளுபடி,மகளிர் சுய உதவி குழு கடன் உதவிகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மகளிர் கட்டணமில்லா பேருந்து திட்டத்தின் கீழ் மகளிர்கள் நகரப் பேருந்துகளில் எத்தனை முறை வேண்டுமானாலும் இலவசமாக பயணம் மேற்கொண்டு வருவதால் அவர்களின் பணம் சேமிப்பதற்கு இத்திட்டம் ஊன்றுகோலாக அமைகிறது.

நெல்லை மாவட்டத்தில் மொத்தம் குடும்ப அட்டைதாரர்கள் 5,01,877 உள்ளார்கள் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் இதுவரை முதல் கட்டமாக கிராமப்புறங்களில் 528 நியாய விலை கடைகளில் 2,46, 277 குடும்ப அட்டைதாரர்களில் 2,16,025 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டதில் 760 முகாம்கள் மூலம் 1,49,353 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக நகர்புறத்தில் 312 நியாய விலைக் கடைகளில் உள்ள 2,55,600 குடும்ப அட்டைதாரர்களுக்கு 182023 முதல் விண்ணப்பங்கள் மற்றும் டோக்கன்கள் வழங்கப்பட உள்ளது.

மகளிர்கள் வாழ்வாதாரத்தில முன்னேற வேண்டும் என அவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொழில் தொடங்குவதற்கான கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.அதன்படி இன்று நெல்லை மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூபாய் 20 லட்சத்து மதிப்பில் 25 பயனாளிகளுக்கு உழவர் காசு கடன்களையும் ரூபாய் 13 லட்சம் மதிப்பில் 28 பயனாளிகளுக்கு மத்திய கால கறவை மாட்டுக் கடன்களையும், ரூபாய் 15.86 லட்சம் மதிப்பில் 19 பயனாளிகளுக்கு சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான கடன்களையும் ரூ.11.20 லட்சம் மதிப்பில் 20 பயனாளிகளுக்கு ஆதிராவிடர் நலத்திட்டத்திற்கான கடன் உதவிகளையும் ரூபாய் 4.20 கோடி மதிப்பில் 35 குழுவினை சார்ந்த சுமார் 520 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன்களையும் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு மகளிர் தொழில் முனைவோர் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் 10 பயனாளிகளுக்கு சிறு வணிக கடன்களையும் ரூபாய் 25000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு மாற்றுத்திறனாளி கடன் உதவிகளையும், ரூபாய் 50,000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்ட கை பெண்கள் ஆதரவற்ற உதவிகள் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு சம்பளக் கடன் உதவியும் ரூபாய் 1 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு முத்துரா கடன் உதவி என மொத்தம் 643 பயனாளிகளுக்கு ரூபாய் 5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 32 பயனாளிகளுக்கு 11.56 லட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மூன்று சக்கர சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,10 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் செந்தில்குமார், மாநகராட்சி ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜ் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்,பாளையங்கோட்டை ஒன்றிய குழு தலைவர் தங்க பாண்டியன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அழகிரி,மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் உமா மகேஸ்வரி உள்பட கூட்டுறவு சங்க அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மணிப்பூரின் மெழுகுதிரிகள்!

அவமானகரமான கூச்சத்தாலும்
பதை பதைக்கின்ற அச்சத்தாலும்
உடம்பு முழுதும்
ஊசி குத்துவது போல் நரக வேதனை!.

மானத்தை மறைக்க
மிருகங்களின் வேட்டையில் இருந்து
தப்பித்து
இந்த பூமி பிளந்து அதை ஆடையாக
அணிந்து
அப்படியே புதைந்திட மாட்டோமோ
என கதறி பதறி ஓடுகின்ற இரண்டு
மான்கள்!

கைகளிலும் வாய்களிலும்
கோரப்பற்களோடு துரத்தும்
வெறி பிடித்த ஓநாய்கள்!
இது ஏதோ காட்டில் நடந்த நிகழ்வு அல்ல!
நடந்தது நமது நாட்டில்
இடம் பெயர் மணிப்பூர்!

கொத்துக்கொத்தாய்
யூதர்களைக் கொன்ற ஹிட்லர் கூட
ஒட்டுத்துணி இல்லாமல்
பெண்களை ஓடவிட்டதில்லை.

அரைகுறையாய் ஆடை உடுத்திய
ஆதிகாலத்து மனிதன் கூட
இப்படி பெண்களை அம்மணமாக
அட்டூழியம் செய்ததில்லை!

இங்கு நதியும் தெய்வமும் பூமியும் நாடும்
மாதா என வாய்கிழிய கத்துவார்கள்!!

ஆனால் ஆடை ஏதும் இல்லாமல்
அழுது புலம்பி ஐயோ என
மிருக வெறியர் முன்னால் எம்
சகோதரிகள் துடித்ததை பார்த்த போது
பாரத மாதாவை பெண்ணாக
உச்சத்தில் வைத்து பின்பு பெண்களை
பள்ளத்தில் புதைத்த போலிகள்
இவர்கள் என உணர முடிகிறது.

ஏன் எப்படி எங்கிருந்து வந்தது
இந்த காட்டுமிராண்டித்தனம்!

தனது அரசியல் லாபத்திற்காக
அள்ளிவிடும் அடுக்கடுக்கான
வெறுப்பு பேச்சுகளா!

குதறி வீசப்பட்ட பில்கிஸ் பானுக்களின்
குற்றவாளிகளை விடுதலை செய்து
கற்கண்டும்
இனிப்பும் கொடுத்த கொடூரங்களா!
சட்டத்திற்கு எதிரான அட்டூழியங்களுக்கு
சட்ட பாதுகாப்பு கொடுத்த
அரசியல் சதுராட்டமா!

இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னால்
குஜராத்தில் ஆரம்பித்த அராஜக
தாண்டவ புயல் இன்று மணிப்பூரில்
மையம் கொள்ள வந்ததா!

மனம் பதை பதைக்கிறது!
எங்கே போகிறோம் நாம்!
அரசியல் சுய நலத்துக்காக சட்டத்தின்
ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி விட்டு
மதத்தின் பேரால் மரண ஓலங்களை
அரங்கேற்றி விட்டார்கள்!

மணிப்பூர் நிகழ்வு ஆத்திரத்தால்
உடனடியாக
வந்து முடிந்ததில்லை.
கொஞ்சம் கொஞ்சமாக ஊன்றிய
பிரிவு விஷ வித்து இன்று பெரும் நாசமாய்
உச்சத்தில் உட்கார்ந்து இருக்கிறது.

குறுமதி படைத்த சூதுமதியாளர்களால்
குற்றுயிராய் ஓடிய எங்கள் தமக்கைகளே!

நாகரிகவாதிகள் உங்களுக்காக வடித்த
கண்ணீர் உங்களுக்கு ஆடையாக
மாறியிருக்கிறது!
அம்மணமாய் இருந்தது
உங்களை துரத்திய மிருகங்களே!

ஓடும்போது நீங்கள் கத்தி எழுப்பிய
கதறல் ஒலிகள் மதம் பெயரால் அரசியல்
செய்யும் காட்டு மிராண்டிகளை
அடையாளம் காட்டி இருக்கும்!

எங்களை ஈன்றெடுக்காத அன்னையரே!
நீங்கள் இழந்து துடித்த கற்பு
இனி பல பெண்களை காக்கும்
கேடயமாக
நிற்கப்போகிறது!

தங்களை வருத்தி எமக்கு வெளிச்சம்
தந்த மெழுகுதிரிகளே!
பிளவு அரசியல் எத்தனை கொடுமை என
இந்தியாவுக்கே அடையாளம் காட்டி
இருக்கிறீர்கள்!

அதற்காக நீங்கள் இருக்கும் திசை
நோக்கி
இருகரம் தூக்கி தொழுகிறோம்.
மணிப்பூர் மெழுகுதிரிகளே!

– பொள்ளாச்சி **கி.அ.இராசன் எம்.ஏ.**
நூலாசிரியர் : நீதிக்கட்சி To திராவிடமாடல்

கள்ள நோட்டுப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த

உயர் மதிப்பிலான ரூபாய் நோட்டுகளில் 'மைக்ரோசிப்' பொருத்தப்படுமா?

மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி !

புதுடெல்லி, ஜூலை 31 -

ஒன்றிய அரசு உயர் மதிப்பிலான ரூபாய் நோட்டுக்களை அச்சிடும்போது அதில் மைக்ரோசிப் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்றும் இந்தியாவில் உள்ள 3 நாணயச்சாலைகளில் அச்சிடப்பட்ட 8810.65 மில்லியன் 500 ரூபாய் நோட்டுகளில் ரிசர்வ் வங்கியில் 7260 மில்லியன் நோட்டுக்கள் மட்டுமே பெறப்பட்டன என்றால் மீதமுள்ள ரூபாய் நோட்டுக்கள் குறித்த விபரம் என்ன என்று திருவண்ணாமலை மக்களவை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாத்துரை நாடாளுமன்ற மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அது குறித்த விபரம் வருமாறு :

(அ) புதிய வடிவமைப்பு மற்றும் பல்வேறு மதிப்புகள் கொண்ட ரூபாய் நோட்டுக்களை அச்சிடுவது மற்றும் புழக்கத்தில் விடுவது ஆகிய நிலைகளில் பின்பற்றப்படும் அளவுகோல்கள் என்ன,

(ஆ) உயர் மதிப்புடைய ரூபாய் நோட்டுகளை அச்சிடும் போது அவற்றில் மைக்ரோசிப்களை பொருத்தும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்களை குறிப்பிடவும்,

(இ) 201617 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 500 ரூபாய் நோட்டுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்கான மொத்த செலவு என்ன என்பதை தெரிவிக்கவும்,

(ஈ) பெங்களூரு, நாசிக் மற்றும் திவாஸ் ஆகிய 3 நகரங்களில் அமைந்துள்ள அரசு நாணயச்சாலைகளில் 8810.65 மில்லியன் 500 ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட்டன. ஆனால், ரிசர்வ் வங்கியில் 7260 மில்லியன் ரூபாய் நோட்டுகள் மட்டுமே பெறப்பட்டதா, அவ்வாறாயின், அந்த நோட்டுக்கள் ஏன் தகுதியற்றவை ஆயின என்பதற்கான காரணங்கள் குறித்தும், ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பிக்கப்படாத அந்த 500 ரூபாய் நோட்டுகளின் மதிப்பு என்ன என்பதையும் குறிப்பிடவும்,

(உ) மேற்சொன்ன விவகாரம் குறித்து ஒன்றிய அரசு விசாரணை மேற்கொண்டதா, அப்படியானால் அதன் முடிவுகள் என்ன,

(ஊ) மேற்சொன்ன கணிசமான மதிப்புடைய ரூபாய் நோட்டுகள் காணாமல் போனதால் ஏற்படும் பாதுகாப்பு அபாயங்களை கணக்கிட இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) மற்றும் இதர தொடர்புடைய அதிகார அமைப்புகளுடன் ஒன்றிய அரசு இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா, அப்படியானால் அதன் விவரங்கள்,

(எ) இது போன்ற தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள சரி செய்யும் நடவடிக்கைகள் என்ன ?

இவ்வாறு சி.என். அண்ணாத்துரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விக்கு பதிலளித்த ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி குறிப்பிட்டதாவது :

(அ) இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934 இன் பிரிவு 25 இன் படி, வங்கி நோட்டுகளின் வடிவமைப்பு, வடிவம் மற்றும் கச்சாப்பொருள் ஆகியவை பற்றி ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியம் அளித்த பரிந்துரைகளை பரிசீலித்து மத்திய அரசால் அங்கீகரிக்கிறது. ரூபாய் நோட்டுகளின் வடிவமைப்பு மற்றும் புதிய பாது

காப்பு அம்சங்கள் மூலம் கள்ள நோட்டுகளை புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையிலும், கள்ளநோட்டை அச்சடிக்க இயலாத வகையிலும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதன்படி, ரிசர்வ் வங்கி ஒன்றிய அரசுடன் கலந்தாலோசித்து, ரூபாய் நோட்டுகளின் வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, புதிய வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்களுடன் புதிய ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்துகிறது.

(ஆ) இல்லை. (இ) மற்றும் (ஈ) ரிசர்வ் வங்கி அளித்த தகவல்களின்படி, 201617ஆம் ஆண்டில் எஸ்.பி.எம்.சி.ஐ.எல். மற்றும் பி.ஆர்.பி.என்.எம்.பி.எல். ஆகிய அச்சகங்கள் ரிசர்வ் வங்கிக்கு வழங்கிய 500 ரூபாய் நோட்டுகளின் (பழைய மற்றும் புதிய எம்.ஜி. தொடர்) மொத்த நோட்டுகளின் எண்ணிக்கை 9273 மில்லியன் எண்ணிக்கை ஆகும்.

ரிசர்வ் வங்கியின் 17.06.2023 தேதியிட்ட செய்திக் குறிப்பில் அந்த அச்சகங்களிலிருந்து ரிசர்வ் வங்கிக்கு வழங்கப்பட்ட அனைத்து ரூபாய் நோட்டுகளும் முறையாக கணக்கில் சேர்க்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. மேலும், அச்சகங்களில் அச்சிடப்பட்டு ரிசர்வ் வங்கிக்கு விநியோகிக்கப்படும் ரூபாய் நோட்டுகளை மறுசீரமைப்பு செய்ய கச்சிதமான முறைகள் உள்ளன. அவற்றில் ரூபாய் நோட்டுகள் தயாரிப்பு, இருப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கான நெறிமுறைகளும் அடங்கியுள்ளன.

(உ) முதல் (எ) ஆகிய கேள்விகளுக்கு (இ) மற்றும் (ஈ) ஆகிய வற்றுக்கு சொல்லப்பட்ட பதிலை கருத்தில் கொண்டால் கேள்விகள் எழ வாய்ப்பில்லை.

இவ்வாறு ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பதிலளித்தார்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.16/2023–2024/வ1/நாள்–26.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **தூத்துக்குடி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (8 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **இருஉறை** முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **21.08.2023 – 14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **05.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4150/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், திருநெல்வேலி

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

சிவகங்கையில் நடைபெற்ற சிவகங்கை சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, நகர கழக செயலாளர் துரை ஆனந்த், ஒன்றியச் செயலாளர்கள் ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், துரைராஜா மணி, நெடுஞ்செழியன், ஆர்.எம்.கென்னடி, ஆரோக்கியசாமி, கேப்டன் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.